**கவனிக்க** .- *2014.11.28 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி* I : *தொகுதி* (III) *மற்றும் பகுதி* II *பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1892 - 2014 දෙසැම්බර් මස 05 වැනි සිකුරාදා - 2014.12.05

*1892 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(*அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது*)

# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(*ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.*)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1912 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 1912 | ஏல விற்பனைகள் | 1916 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, *அதாவது 2014, திசெம்பர் மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, திசெம்பர் மாதம் 12 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு

பாவனையிலிருந்து அகற்றிய பொருட்களை ஏல விற்பனை செய்தல்

கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சின் பாவனைக்குட்படுத்தப்பட்ட குளிரூட்டிகளும் மற்றும் உதிரிப்பாகங்களும் 2014.12.16 ஆந் திகதியன்று மு. ப. 9.30 மணிக்கு இவ்வமைச்சின் வளவில் ஏல விற்பனை செய்யப்படவுள்ளது.

ஏல விற்பனையின் போது கொள்வனவு செய்யப்படும் பொருட்களை உடனடியாக பணம் செலுத்தி அமைச்சின் வளவிலிருந்து அகற்றிக்கொள்ள வேண்டும். அனைத்துக் கொடுப்பனவுகளும் பண வடிவில் செலுத்தப்பட வேண்டிய அதேவேளை காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

ஏல விற்பனையில் பொருட்களைக் கொள்வனவு செய்ய வருவோர் தமது தேசிய ஆள் அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும். அமைச்சினால் விடுக்கப்படும் ஆகக்குறைந்த விலை நிர்ணயிப்பை ஏற்றுக்கொள்ளாத சந்தர்ப்பத்தில், அமைச்சின் விருப்பப்படி குறித்த பொருட்களை ஏலத்திலிருந்து வாபஸ் பெற்றுக்கொள்ள அமைச்சுக்கு உரிமை உண்டு.

இதுபற்றிய மேலதிக விபரங்களை 011-2541739 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக வேலை நாட்களில் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணி வரை கணக்காளர் (வழங்கல்) மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

செயலாளர்,
கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு.

கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு,
இல. 45, சாந்த மைக்கல் வீதி,
கொழும்பு 3.

12-130

---

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : ரூ எஸ் ஆர் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ 98056
பதிவுசெய்யப்பட்ட அலுவலக விலாசம் : இல. 88ஏ, கண்டி வீதி, தளுகம, களனி

யூ. நிஹால் பெரேரா,
சட்டத்தரணி,
மேம்படுத்துநர்.

12-173

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : பேர்ஸ்ட் போஸ்ட் செக்குரிட்டி சேர்விசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 25.08.2014
பதிவு இலக்கம் : பீவீ 100468
பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் : இல. 186, பார்க் வீதி, கொழும்பு 5

கம்பனிப் பணிப்பாளர்.

12-182

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : பெரடைஸ் ஜல் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ 101600
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 24.10.2014
கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட முகவரி : இல. 446, 2/1, காலி வீதி, இரத்மலானை

கம்பனிச் செயலாளர்.

12-194

**அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்**

கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு திரு. பி. ஜீ. ஞானசிறியினால் 2014.01.17 ஆந் திகதி எழுதி உறுதிப்படுத்தப்பட்ட 3943 ஆம் இலக்க அற்றோணி தத்துவத்தின் பிரகாரம் மொரட்டுவை, கட்டுபெத்த, பண்டாரநாயக்க மாவத்தை, இல. 62/ஏ/4 எனுமிடத்தில் வசிக்கும் தேசிய ஆள் அடையாள அட்டை இல. 720220032V கொண்ட பாலமன்டடிகே திலும் ஜயசாந்த பெர்னாண்டோ ஆகிய என்னால் மொரட்டுவை, கட்டுபெத்த, பண்டாரநாயக்க மாவத்தை, இல. 62/ஏ/4 இல் வசிக்கும் பிரேமபந்துகே சஜீவனீ ஹேஷாந்திகா என்பவருக்கு வழங்கப்பட்டிருந்த அற்றோணி தத்துவம் இத்தால் இரத்துச்செய்து செயல் இழக்கச் செய்யப்படுவதாகவும் மேற்படி ஆவணம் இன்று முதல் செயல்பட மாட்டாது எனவும் இத்தால் சகலருக்கும் அறிவித்துக்கொள்கிறேன்.

பாலமண்டடிகே திலும் ஜயசாந்த பெர்னாண்டோ.

12-190

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : ரஷ்மி கிரிடொம் பவர் சொலூஷன்ஸ் (பீவீரீ) எல்ரீடி
கம்பனியின் இலக்கம் : பீவீ 101662
பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் : இல. 89/ ஏ, பட்டலந்த, ஹேயந்துடுவ

கம்பனியின் பெயர் : றுசிறு ட்ரேடிங் (பீவீரீ) எல்ரீடி
கம்பனியின் இலக்கம் : பீவீ 101433
பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் : விமலபால பில்டிங், 377ஈ, ஹைலெவல் வீதி, கன்சபா சந்தி, நுகேகொடை

12-176

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : காமிட் கரண்டீ லிமிட்டெட்
கம்பனி பதிவிலக்கம் : ஜீஎல் 2149
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2011, யூலை 22
பதிவுசெய்யப்பட்ட அலுவலக விலாசம் : இல. 262, பார் வீதி, மட்டக்களப்பு

12-192

**அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்**

வைக்கால, 'மல்பியலி' என்ற முகவரியில் வசிக்கும் பிரசித்த நொத்தாரிசு வர்ணகுலசூரிய எலெக்ஸ் நிஷாந்த பர்னாந்து அவர்களால் 2003.09.01 ஆந் திகதி எழுதி உறுதிப்படுத்திய 1782 ஆம் இலக்க அற்றோணி அதிகாரப்பத்திரத்தின் பிரகாரம் மஹவெவ, மெதமஹவெவ என்ற முகவரியுடைய தற்போது இல. 27சி, தால்பன்வில, மாரவில என்ற முகவரியில் வசிக்கும் தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் 666872738V மற்றும் கடவுச்சீட்டு இலக்கம் N 0935481 எனும் மஹஅதிகாரி முதலிகே தோன மரினா பென்ஸிஸ் வீரன்திக்கா ஆகிய என்னால் மஹவெவயில் வசிக்கும் தொல்கமுதியன்சேலாகே ஸ்ரீமத்தி பிரிய காந்தி ருத்திகோ என்பவருக்கு வழங்கப்பட்டிருந்த அற்றோணி அதிகாரத்தை இரத்துச்செய்கிறேன். மேலும் மேற்படி ஆவணம் இன்றிலிருந்து அதிகாரமற்றது என்பதை அனைவருக்கும் இத்தால் அறியத்தருகிறேன்.

மஹஅதிகாரி முதலிகே தோன மரினா பென்ஸிஸ் வீரன்திக்கா.

12-189

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : சிலோன் கொகனட் கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ 100851
பதிவு முகவரி : இல. 47/ 6, அலெக்ஸான்ட்ரா பிளேஸ், கொழும்பு 7
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 22.09.2014

கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

12-181

---

**அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்**

இல. 47, அய்வனிக் கோட், விட்வை, ஒன்டாரியோ, எல்ஐஎன் 6ஈ3, கனடா (No. 47, Ivanic Court, Whitby, Ontario, LINE E3, Canada) எனும் இடத்தில் வதியும் சீலா த சில்வா ஆகிய நான், ஒன்டாரியோ பகிரங்க நொத்தாரிசு, றொபட் பி. விடின்டன் அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2010 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 12 ஆந் திகதியுடைய அற்றோணித் தத்துவத்தின் மூலம் கொழும்பு 5, பொல்ஹேன்கொட தோட்டம், இல. 21/34ஏ எனும் இடத்தில் வதியும் சுன்னாதெனியகே விபுல சேனாவுக்கு அதிகாரமளிக்கப்பட்ட அற்றோணித் தத்துவம் 2014 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 13 ஆந்

திகதி தொடக்கம் அமுலாகும் விதத்தில் இரத்துச்செய்யப்பட்டுள்ளதென இலங்கை அரசாங்கத்துக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

சீலா த சில்வா.

12-236

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : சிலோன் கொக்கோ கிறீன் மெனுபக்ஷரிங் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி பதிவு இலக்கம் : பீவீ 101948
கூட்டிணைப்புத் திகதி : 2014, நவெம்பர் 5
கம்பனி பதிவு முகவரி : ஏஹல களுகமுவ, தளஹிற்றிமுல்ல, குளியாப்பிட்டிய

எடிப்புலி ஆராய்ச்சிகே சமித திலன் ரத்நாயக்க,
பணிப்பாளர்.

12-60

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி 2014 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 20 ஆந் திகதி பதிவுசெய்யப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : சகா புரொபர்ட்டி டிவலொப்பர்ஸ் அன்ட் கன்ஸ்ட்ரக்ஷன் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி பதிவு இலக்கம் : பீவீ 101531
பதிவு முகவரி : இல. 22, அறதுசா ஒழுங்கை, கொழும்பு 6

டீஸ் மெனேஜ்மென்ட் கன்சல்டன்ஸ்
மற்றும் செக்ரடேரியல் சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

12-85

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : ட்ரவலி சிலோன் ஹொலிடேஸ் (பீவீரீ) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீவீ 101762
கூட்டிணைப்புத் திகதி : 28.10.2014
பதிவு முகவரி : இல. 42, சென்ட் செபஸ்தியன் வீதி, மஹ ஹுனுப்பிட்டி, நீர்கொழும்பு

பணிப்பாளர்.

12-29

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

தெகடன, நாரம்பொல, 2/106 ஆம் இலக்க முகவரியில் வசிக்கும் 752261814V ஆம் இலக்க தேசிய ஆள் அடையாள அட்டையின் உரித்தாளியான வேபொல பதிரென்னெஹெலாகே ரெஷான் தனேஸ் பதிரன ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பிரசித்த நொத்தாரிசு திரு. தியூடர் புலத்வெல அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட கொழும்பு, பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் அற்றோணித் தத்துவப்பத்திர பதிவுப் புத்தகத் தொகுதி இல. 272 இல் பக்க இல. 161 இல் 2887 ஆம் இலக்க தினக்குறிப்புப் புத்தகத்தில் பதியப்பட்டுள்ள அற்றோணித் தத்துவப்பத்திரத்தின் மூலம் என்னுடைய சட்டபூர்வமான அற்றோணி தத்துவதாரியாக தெகடன, நாரம்பொல, 2/106 ஆம் இலக்க முகவரியில் வசிக்கும் 767221177V ஆம் இலக்க தேசிய ஆள் அடையாள அட்டையின் உரித்தாளியான வேபொல பதிரென்னெஹெலாகே சன்ஜீவனி ரசிகா பதிரன என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவத்தை உடனடியாக நடைமுறையாகும் வகையில் செயலிழக்கச் செய்து இரத்துச்செய்கிறேன் என்று இத்தால் அனைவருக்கும் அறியத்தருகிறேன்.

வேபொல பதிரென்னெஹெலாகே ரெஷான் தனேஸ் பதிரன.

12-7

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

லுணுவில, உடசிரிகம, 2 ஆவது ஒழுங்கை, 215/2 ஆம் இலக்கத்தைச் சேர்ந்தவரும் தற்போது அவுஸ்திரேலியா, என்எஸ் டபிள்யு 2154, காசல் ஹில், செப்ஸ்ரோவ் ட்ரைவ், 48 ஆம் இலக்கத்தில் வசிப்பவருமான ஹந்தகம ஆராய்ச்சிகே றுவினி நிரோஷா சமந்தி பெரேரா (தேசிய ஆள் அடையாள அட்டை இல. 715491079V) ஆகிய நான், களுத்துறை பிரசித்த நொத்தாரிசு பியதாச ஹேவாலங்கார என்பவரால் 2011, பெப்புருவரி 3 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் 1552 ஆம் இலக்கம் உடையதும் நுகேகொடை, தெல்கந்த பதிவாளர் நாயக வலய அலுவலக எழுத்துமுல அதிகாரப் பதிவேடு மற்றும் அற்றோணித் தத்துவப்பதிவேடு 66 ஆம் தொகுதி, 3 ஆம் பக்க 1033 ஆம் இலக்க நாட்புத்தகத்தில் 2011.02.10 ஆந் திகதி பதியப்பட்டு மொறட்டுவை, மொறட்டுமுல்ல, பிரேசர் வீதி, 479/11/4 ஆம் இலக்க முகவரியைச் சேர்ந்த கெவிட்டியகல லியனராலலாகே டொன் அலென் றோஸ் என்பவருக்கு என்னால் வழங்கப்பட்ட விசேட அற்றோணித் தத்துவம் இத்தால் இரத்துச்செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்பட்டுள்ளதுடன், இது முதற்கொண்டு எவ்வித கொடுக்கல் வாங்கல்களுக்கும் மேற்கூறப்பட்ட விசேட அற்றோணித் தத்துவத்தைப் பாவித்து செயற்பட இயலாதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவிக்கின்றேன்.

ஹந்தகம ஆராய்ச்சிகே றுவினி நிரோஷா சமந்தி பெரேரா.

12-128

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : ஸ்பெக்ட்ரா ஃபௌண்டேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம்* : ஜீஏ 2966
*பதிவு முகவரி* : இல. 19, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 03.11.2014

கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

12-8

---

## அறிவித்தல்

ஜீ. பி. என். எஸ். கன்ஸ்ட்ரக்ஷன் (பீவீரீ) லிமிட்டெட்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 8 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*(1) கம்பனியின் பெயர்* : ஜீ. பி. என். எஸ். கன்ஸ்ட்ரக்ஷன் (பீவீரீ) லிமிட்டெட்
*(2) கூட்டிணைப்புத் திகதி* : 25.09.2014
*(3) பதிவு இலக்கம்* : பீவீ 100965
*(4) பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி* : இல. 80/1ஈ,
லெயார்ட்ஸ் வீதி,
பம்பலப்பிட்டி, கொழும்பு 4

திருமதி சந்திரவதனி வாசவன்,
கம்பனிச் செயலாளர்.

12-51

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி பதிவுசெய்யப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*நிறுவனத்தின் பெயர்* : றிபல் இரிகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்
*நிறுவனத்தின் இலக்கம்* : பீவீ 101432
*பதிவுசெய்யப்பட்ட திகதி* : 13.10.2014
*பதிவுசெய்யப்பட்ட முகவரி* : இல. 48, 27 ஆவது தெரு, கொழும்பு 3

டி. பீ. சீ. பீ. வீரசிங்க,
நிறுவனச் செயலாளர்.

12-49

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : எஸ் வை டெக் (பீவீரீ) எல்ரீடி
*பதிவிலக்கம்* : பீவீ 101894
*கூட்டிணைப்புத் திகதி* : 03.11.2014
*பதிவு முகவரி* : இல. 217/டி, ரத்தொழுவ, சீதுவை

பி. டபிள்யு. கோர்ப்பரேட் செக்ரட்டேரியல் (பீவீரீ) எல்ரீடி
கம்பனிச் செயலாளர்.

12-121

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : ஒகோ டிரான்ஸிட் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 101992
*பதிவு முகவரி* : இல. 168, ஜம்புகஸ்முல்ல மாவத்தை, நுகேகொடை

செக்ரடேரியஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
பீவீ 5958.

12-93

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

தங்காலை, மாரகொல்லிய 'லெகூடன் பெரடைஸ்' இல் வசிக்கும் பியந்த கஸ்தூரிஆரச்சி (தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் 701441630V) ஆகிய நான், மாத்தறை பிரதான நொத்தாரிசு திருமதி தரங்கா என். பினிதிய என்பவரால் எழுதி உறுதிப்படுத்தப்பட்ட 2403 ஆம் இலக்க 2013.01.01 ஆந் திகதி கொண்ட அற்றோணி அதிகாரத்தின் மூலம் மிரிஸ்ஸ, பண்டமுல்ல ஸன்பிம் இல் வசிக்கும் புத்திக்க சுத்ரிக்கு ஜயவிக்ரம என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணி அதிகாரத்தை இத்துடன் வலுவிழக்கச்செய்து இரத்துச்செய்வதுடன், அவரால் எனக்காக செய்யப்படுகின்ற எந்தவொரு செயற்பாட்டுக்கும் நான் பொறுப்புக்கூற மாட்டேன் என்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

பியந்த கஸ்தூரிஆரச்சி.

12-115

## கம்பனியொன்றின் கூட்டிணைப்பு தொடர்பான பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : இற்றலியன் கிச்சின்ஸ் (பீவீரீ) எல்ரீடி
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 101450
*கூட்டிணைப்புத் திகதி* : 2014.11.13
*கம்பனியின் பதிவு முகவரி* : இல. 3/17, கின்சி வீதி, கொழும்பு 8

இற்றலியன் கிச்சின்ஸ் (பீவீரீ) எல்ரீடி
என்ற கம்பனிக்காகவும்
அதன் சார்பிலும்
பி. டபிள்யூ. கோர்ப்பரேட் செக்ரட்டேரியல்
(பீவீரீ) எல்ரீடி

2014, நவெம்பர் 18.

12-116

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

குருதெனிய, இலுக்மோதர, இல. 181 இல் வதியும் (தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் 691882500V) ஹேவா ரணசிங்ஹகே ஹேமன்த சஞ்ஜீவ ஆகிய என்னால் கண்டி, சுதுஹும்பல, விஹார மாவத்தை, 34/18 இல் வதியும் ஹேவா ரணசிங்ஹகே சரத் என்பவருக்கு வழங்கப்பட்ட பிரசித்த நொத்தாரிசு பண்டுக ரத்நாயக்க என்பவரால் 2006.04.13 ஆந் திகதி எழுதி உறுதிசெய்யப்பட்ட 991 ஆம் இலக்க அற்றோணி அதிகாரத்தை இத்தால் இரத்துச்செய்வதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் அறிவிப்பதுடன் அத்தத்துவப்பத்திரத்துக்கு சட்டத்தின் முன் எத்தகுதியும் இல்லை எனவும் இத்தால் அறிவித்துக்கொள்கிறேன்.

ஹேவா ரணசிங்ஹகே ஹேமன்த சஞ்ஜீவ.

12-84

## கம்பனியொன்றின் கூட்டிணைப்பு தொடர்பான அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி 2014, நவெம்பர் 3 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : டைல் கெலரி (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 101901
*பதிவுசெய்யப்பட்ட விலாசம்* : இல. 496, பேராதெனிய வீதி, கண்டி

கம்பனிச் செயலாளர்.

12-86

---

## கம்பனியொன்றின் கூட்டிணைப்பு தொடர்பான பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : இயுரோப்பியன் டிசைன்ஸ் அன்ட் பஸன்ஸ் (பீவீரீ) எல்ரீடி
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 102018
*கூட்டிணைப்புத் திகதி* : 2014.11.13
*கம்பனியின் பதிவு முகவரி* : இல. 34, வளவ்வத்த வீதி, கங்கொடவில, நுகேகொடை

இயுரோப்பியன் டிசைன்ஸ் அன்ட் பஸன்ஸ்
(பீவீரீ) எல்ரீடி என்ற கம்பனிக்காகவும்
அதன் சார்பிலும்
பி. டபிள்யூ. கோர்ப்பரேட் செக்ரட்டேரியல்
(பீவீரீ) எல்ரீடி
செயலாளர்கள்.

2014, நவெம்பர் 18.

12-117

---

# ஏல விற்பனைகள்

## கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ – பாணந்துறை கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ (பதிவு இலக்கம் பீகியூ 116) மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம்-*

### அட்டவணை

**மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், பாணந்துறை தல்பிடிய தெபத்த பாணந்துறை ஹேனமுல்ல கிராமத்தில் அமைந்துள்ள ஆர்டன் பொரண்ட் காணியின் நிலஅளவையாளர் ஏ. ஜீ. சீ. சிறிசோமவினால் தயாரிக்கப்பட்ட 2007.05.06 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 6920 இல் காண்பிக்கப்பட்ட லொட் ஏ.**

**காணியின் விஸ்தீரணம் :**
**ஒரு றூட் சைபர் தசம் ஆறு மூன்று பேர்ச் (0ஏ. 1றூ. 0.63பே.)**

**மற்றும் இக்காணியில் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், தாவரங்கள் அனைத்தும் சேர்த்து மற்றும் கீழ்விபரிக்கப்பட்ட காணியுடன் பாதையை உபயோகிக்கும் உரிமையுடன் சேர்த்து.**

**மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், பாணந்துறை தல்பிடிய தெபத்த பாணந்துறை தொட்டமுனை, பாணந்துறை ஹேனமுல்ல கிராமத்தில் அமைந்துள்ள ஆர்டன் பொரண்ட் காணியின் நிலஅளவையாளர் கே. கே. திருநாவுக்கரசு அவர்களினால்**

**தயாரிக்கப்பட்ட 1968.01.23 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 590 இல் காண்பிக்கப்பட்ட லொட் 13.**

**காணியின் விஸ்தீரணம் : ஒரு றூட் ஏழு பேர்ச்**
**(0ஏ. 1றூ. 7பே.)**

**மற்றும் இக்காணியில் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், தாவரங்கள் அனைத்தும் சேர்த்து மற்றும் கீழ்விபரிக்கப்பட்ட எல்லாம் சேர்த்து.**

**லொட் பி2 - ஒரு றூட் பதினெட்டு பேர்ச்**
**(0ஏ. 1றூ. 18பே.)**

கடன் எடுத்த கம்பனி சட்டப்படி தாபிக்கப்பட்ட இலக்கம் 29, காலி றோட், கெசல்வத்த, பாணந்துறையில் அமைந்துள்ள சேலர் டயர் டிரேடர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் காணியை ஈடுவைத்த பேருவலதொட்டகே மேரி பொலின் சாந்தி பெர்னாந்து மற்றும் பமினியந்திகே சாமலா பிரசான்ஜி பெர்னாந்து மேற்படி கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ இற்கு ஈடுவைத்துள்ளார்கள்.

என்னால் மேற்சொல்லப்பட்ட காணி பகிரங்க ஏலத்தின் மூலம் 2014, திசெம்பர் மாதம் 29 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2013.12.20 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், ''லக்பிம'', ''த ஐலண்ட்'' மற்றும் ''வீரகேசரி'' பத்திரிகைகளையும், ஏலவிற்பனை விளம்பரத்திற்காக 2014.12.05 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2014.12.08 ஆந் திகதிய ''லக்பிம'', ''த ஐலண்ட்'' மற்றும் ''வீரகேசரி'' பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**காணியைச் சென்றடையும் விதம்.**- கெசல்வத்த பொலிஸ் நிலையத்திலிருந்து கொழும்பு-காலி பழைய றோட்டில் கொழும்பு பக்கம் 50 மீற்றர் சென்று இடதுபக்கம் உள்ள பொதுசேவா மாவத்தை (கொழும்பு றோட் 1 ஆவது லேன்) சென்று காணியை அடைய முடியும். (இலக்கம் 13, கொழும்பு றோட், 1 ஆவது லேன்)

**கொடுப்பனவு செலுத்தும் விதம்.**- வெற்றி பெற்ற கொள்வன வாளர் ஏலமுடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% ;
(2) உள்ளூராட்சிமன்ற வரி 1% ;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5 % ;
(4) நொத்தாரிசு கட்டணம் 2,000 ரூபா ;
(5) இலிகிதர் கட்டணம் 500 ரூபா ;
(6) ஏலத்திற்காக செலவுசெய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள் ;

மிகுதி 90% ஏலத்திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ அலுவலகம் அல்லது பாணந்துறைக் கிளையில் செலுத்த வேண்டும்.

வேறு விபரங்களுக்காக.- முகாமையாளர், கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ, இல.375, காலி வீதி, பாணந்துறை. தொலைபேசி இல. : 038-2236808; தொலைநகல் இல. : 038-2234167.

எல். பி. சேனாநாயக்க (சமாதான நீதவான்),
மூத்த உத்தரவுபெற்ற ஏலதாரர், விலைமதிப்பீட்டாளர்,
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 182,
3 ஆவது மாடி,
புதுக்கடை வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி/தொலைநகல் இல. 011-2445393.

12-200

---

**கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ —**
**மத்துகம கிளை**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ (பதிவு இலக்கம் பீகியூ 116) மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம்-

**அட்டவணை**

**முதலாவது ஆதனம் :**

**மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், இத்தகொடபத்து பஸ்துன் கோரளை மேற்கு மத்துகம பிரதேச சபை எல்லையில் மத்துகம மாவட்டச் செயலாளர், வெட்டவ இலக்கம் 805டி கிராமசேவையாளர் எல்லையில் வெட்டவல கிராமத்தில் அமைந்துள்ள வலுகெண்ணவத்த அல்லது மொணரண்துயுகல்வத்த காணியின் நிலஅளவையாளர் டபிள்யூ. ஏ. வீ. கே. பிரியரத்தனவினால் தயாரிக்கப்பட்ட 2007.06.19 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 16/2007 இல் காண்பிக்கப்பட்ட பகுதிபடுத்திய காணித்துண்டான லொட் 4.**

**காணியின் விஸ்தீரணம் : இரண்டு றூட் ஆறு தசம் ஏழு ஒன்பது பேர்ச் (0ஏ. 2றூ. 6.79பே.)**

**இக்காணியில் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், தாவரங்கள் அனைத்தும் சேர்த்து.**

**இரண்டாவது ஆதனம் :**

**மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், இத்தகொடபத்து பஸ்துன் கோரளை மேற்கு பள்ளிகொட கிராமத்தில் அமைந்துள்ள மதுபெரியவத்த பிட்டிகெடிய காணியின் நிலஅளவையாளர் ஜீ. அதிகாரம் அவர்களினால் தயாரிக்கப்பட்ட 1999.02.24 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 1295 இல் காண்பிக்கப்பட்ட லொட் 3.**

**காணியின் விஸ்தீரணம் : பதினான்கு தசம் மூன்று பேர்ச்**
**(0ஏ. 0றூ. 14.3பே.)**

**இக்காணியில் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், தாவரங்கள் அனைத்தும் சேர்த்து.**

**மூன்றாவது ஆதனம் :**

**மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், இத்தகொடபத்து பஸ்தூன் கோரளை மேற்கு பயட்டதொல கிராமத்தில் அமைந்துள்ள யட்டதொல மடபிம்ம அல்லது திக்கலவாதெணிய லொட் ஏ காணிக்கு நிலஅளவையாளர் டபிள்யூ. ஏ. வீ. பியரத்னவினால் தயாரிக்கப்பட்ட 2010.12.27 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 187ஏ இல் காண்பிக்கப்பட்ட பகுதிபடுத்திய காணி.**

**காணியின் விஸ்தீரணம் : முப்பது தசம் ஒரு பேர்ச் (0ஏ. 0றூ. 30.1பே.)**

**இக்காணியில் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், தாவரங்கள் அனைத்தும் சேர்த்து.**

*முதலாவதாக சொல்லப்பட்ட ஆதனம் கடன் எடுத்த இத்தகொட ஹேவகே பியால் ரங்கன மற்றும் வெளித்தரகே தில்சிக்கா செவ்வந்தி அல்லது வெலிதரகே தில்சிகா செவ்வந்தி மேற்படி கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ இற்கு ஈடுவைத்துள்ளார்கள்.*

*இரண்டாவதாக சொல்லப்பட்ட ஆதனம் கடன் எடுத்த இத்தகொட ஹேவகே பியால் ரங்கன மற்றும் வெளித்தரகே தில்சிக்கா செவ்வந்தி மேற்படி கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ இற்கு ஈடுவைத்துள்ளார்கள்.*

*மூன்றாவதாக சொல்லப்பட்ட ஆதனம் கடன் எடுத்த இத்தகொட ஹேவகே பியால் ரங்கன மற்றும் வெளித்தரகே தில்சிக்கா செவ்வந்தி மற்றும் காணியை ஈடுவைத்த ஹேவகே பியால் ரங்கன மேற்படி கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ இற்கு ஈடுவைத்துள்ளார்கள்.*

என்னால் மேற்சொல்லப்பட்ட ஆதனங்கள் பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்படும்.

(1) முதலாவது ஆதனம் - லொட் 4 (0ஏ. 2றூ. 6.79பே.) 2014, திசெம்பர் மாதம் 22 ஆந் திகதி மு. ப. 10 மணிக்கும்,

(2) இரண்டாவது ஆதனம் - லொட் 3 (0ஏ. 0றூ. 14.3பே.) 2014, திசெம்பர் மாதம் 22 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கும்,

(3) மூன்றாவது ஆதனம் - லொட் ஏ (0ஏ. 0றூ. 30.1பே.) 2014, திசெம்பர் மாதம் 22 ஆந் திகதி பி. ப. 2.00 மணிக்கும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு**.- 2014.06.27 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், ''லக்பிம'', ''த ஐலண்ட்'' மற்றும் ''வீரகேசரி'' பத்திரிகைகளையும், ஏலவிற்பனை விளம்பரத்திற்காக 2014.12.05 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2014.12.05 ஆந் திகதிய ''லக்பிம'', ''த ஐலண்ட்'' மற்றும் ''வீரகேசரி'' பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**காணியைச் சென்றடையும் விதம் (1 ஆவது அட்டவணை, லொட் 4).**- மத்துகமையில் இருந்து அகலவத்த பிரதான றோட்டில் 18 கி. மீ. கட்டை சென்று வலது பக்கம் திரும்பி மொணரந்துவ றோட்டில் 600 மீற்றர் சென்று வாகனங்கள் பரிசோதிக்கும் நிலையம் முன்பு காணி அமைந்துள்ளது. இந்த ஆதனம் மொணரந்துவ றோட்டில் அமைந்துள்ளது.

**(2 ஆவது அட்டவணை, லொட் 3).**- மத்துகமையில் இருந்து 250 மீற்றர் அலுத்கம பக்கம் சென்று வலதுபக்கம் திரும்பி கலபடயாவத்த றோட்டில் 100 மீற்றர் சென்று கடைசியாக இடது பக்கம் திரும்பி 10 அடி றோட்டில் சென்று காணியை அடைய முடியும். இக்காணியின் இலக்கம் 39/1, கலபடயாவத்த றோட்.

**(3 ஆவது அட்டவணை, லொட் ஏ).**- களுத்துறை மத்துகம பிரதான றோட்டில் யட்டதொலவத்த சந்தியில் பாடசாலை வரை சென்று காணியை அடைய முடியும். இக்காணி வலது பக்கம் 200 மீற்றர் சந்திக்கு முன்பு அமைந்துள்ளது.

**கொடுப்பனவு செலுத்தும் விதம்**.- வெற்றி பெற்ற கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% ;
(2) உள்ளூராட்சிமன்ற வரி 1% ;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5 % ;
(4) நொத்தாரிசு கட்டணம் 2,000 ரூபா ;
(5) இலிகிதர் கட்டணம் 500 ரூபா ;
(6) ஏலத்திற்காக செலவுசெய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்.

மிகுதி 90% ஏலத்திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ அலுவலகம் அல்லது மத்துகமைக் கிளையில் செலுத்த வேண்டும்.

*வேறு விபரங்களுக்காக*.- முகாமையாளர், கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ, இல.38, களுத்துறை வீதி, மத்துகமை. தொலைபேசி இல. : 034-2249470 ; தொலைநகல் இல. : 034-2249473.

எல். பீ. சேனாநாயக்க (சமாதான நீதவான்),
முத்த உத்தரவுபெற்ற ஏலதாரர், விலைமதிப்பீட்டாளர்,
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 182,
3 ஆவது மாடி,
புதுக்கடை வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி/தொலைநகல் இல. 011-2445393.

12-201

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
***2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது***
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**எல்லா வர்த்தமானிகளையும் www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

*1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.*

*2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன்* ***அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8*** *அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.*

*3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.*

*4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.*

***5. சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.*** *தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே மணி ஓடர்களுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.*

***6. நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்*** *பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.*

***7. கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.***

*8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.*

*9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.*

*10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-*

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,600 | 00 |

*ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.*

***11. வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி*** *வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.*

***12. ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.***

***13. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.***

***14. 2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-***

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

***எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.***

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.*** *- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

***அட்டவணை - 2014***

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **திசெம்பர்** | .. | வெள்ளி | 05.12.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.11.2014 |
| | | வெள்ளி | 12.12.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.11.2014 |
| | | வெள்ளி | 19.12.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.12.2014 |
| | | வெள்ளி | 26.12.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.12.2014 |

***அட்டவணை - 2015***

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **சனவரி** | .. | வெள்ளி | 02.01.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.12.2014 |
| | | வெள்ளி | 09.01.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.12.2014 |
| | | வெள்ளி | 16.01.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.01.2015 |
| | | வெள்ளி | 23.01.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.01.2015 |
| | | வெள்ளி | 30.01.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.01.2015 |
| **பெப்புருவரி** | .. | வெள்ளி | 06.02.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.01.2015 |
| | | வெள்ளி | 13.02.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.01.2015 |
| | | வெள்ளி | 20.02.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.02.2015 |
| | | வெள்ளி | 27.02.2015 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.02.2015 |

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*